[21st March 1961

Taxis (Egmore station)

*964 *Q.*—Sri A. VEDARATHNAM : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) எழும்பூர் ஸ்டேஷனுக்குள் பேபி டாக்சிகள் அனுமதிக்கப் படாதது ஏன் ?

(இ) இதனுல் பிரயாணிகளுக்கு ஏற்பட்டிருக்கும் அசௌகரியங்களைப் போக்க அரசாங்கம் இவ்வுத்தரவைப் புனராலோசனை செய்யுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The Railway Administration has reported that all taxis are permitted inside the Madras Egmore station to drop passengers ; but that taxis licensed by the Railway are alone permitted to be parked inside the station to pick up passengers. The reasons for the Railway Administration adopting this system of issuing licences are :—

(i) The taxi owners use the premises of the railway and pick up business by carrying passengers arriving by trains.

(ii) A nominal licence fee has to be charged towards the cost of maintenance of the stand, cost of licence, etc. (the nominal license fee is only Rs. 10 per half-year).

(iii) The number of vehicles parked in railway premises and waiting to pick up passengers should not be more than what the available space will permit.

(*b*) As the matter rests with Railway Administration the question of reviewing their orders by this Government does not arise.

Sri A. VEDARATHNAM : இந்தக் கட்டணம் பேபி டாக்சிகளுக்கு மட்டும்தான் விதிக்கப்பட்டு இருக்கிறதா ? பெரிய டாக்சிகளுக்கும் கூடவா ? பிரயாணிகள் சவுகரியத்தை உத்தேசித்து, இந்த டாக்சிகளுக்கு விதிவிலக்களித்து, அவர்களும் ஸ்டேஷனுக்குள்ளே வந்து பிரயாணிகளை ஏற்றிச் செல்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இம்மாதிரி கட்டணம் செலுத்தி, ரயில்வே இலாகாவினுடைய லைசென்ஸ் வாங்கிக்கொண்டு அந்த இடத்திலே 42 டாக்சிகள் இருக்கின்றன. 29 பெரிய டாக்சி, 13 பேபி டாக்சி, இதற்கு மேலும் அங்கு இடமில்லை. ஆகவே இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கிறது. இதைத் தவிர சொந்தக்காரர்கள் வண்டி வேறு உள்ளே வருகிறது. இதற்கு மேலும் அனுமதித்தால் அங்கு குழப்பம் தான் ஏற்படும். ஆகவே தான் இந்தக் கட்டுப்பாடுகளை யெல்லாம் அனுசரிக்கவேண்டியிருக்கிறது.

Sri P. S. K. LAKSHMIPATHI RAJ : இந்த டாக்சிகளுக்கு, கிராம வாசிகள் புரிந்துகொள்ளக்கூடிய அளவிலே 1, 2 என்ற நம்பர்களை போடு வதற்கு அரசாங்கம் அனுமதிக்குமா என்று கேட்கிறேன் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இது ஒரு பிரத்தியேக மான யோசனை. அதைத் தனியாகக் கேட்டால், பார்த்துக்கொள்ளலாம்.